# 108 திவ்யதேச ஸ்தலங்கள்




---

## 5. திரு அன்பில்





**நாகத் தணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்**
**நாகத் தணையரங்கம் பேர் அன்பில் – நாகத்**
**தணைப் பாற் கடல் கிடக்கு மாதி நெடுமால்**
**அணைப் பார் கருத்தனாவன்**

(2417) - **நான்முகன் திருவந்தாதி –** 36

குடந்தை யென்னும் கும்பகோணத்திலும் வெஃகா வென்னும் காஞ்சிபுரத்திலும், திருஎவ்வுள் என்ற திருவள்ளூரிலும், அரங்கம் என்ற ஸ்ரீரங்கத்திலும், பேர் என்ற திருப்பேர் நகரிலும், அன்பிலாகிய, இந்த திருவன்பில் தலத்திலும், நாகத்தில் பள்ளி கொண்டுள்ள பெருமாள் வேறு யாருமல்ல அவன்தான் திருப்பாற் கடலில் பள்ளி கொண்டுள்ள ஆதி நெடுமாலாகும். அவன் தன்னை ஆராதிப்பவர்களை அணைத்துக் காப்பவனுமாவான், என்று திருமழிசை ஆழ்வாரால் பாடப்பட்ட இத்தலம் ஸ்ரீரங்கத்திற்கு அருகாமையிலேயே அமைந்துள்ளது.

டோல்கேட்டில் இருந்தும், திருச்சியிலிருந்தும், லால்குடியிலிருந்தும் செல்லலாம். திருப்பேர் நகர் என்று அழைக்கப்படும் (அப்பக் குடத்தான்) சன்னிதியிலிருந்து

கொள்ளிட நதிக் கரையை கடந்து நடந்தே வந்தால் சுமார் 2 கி.மீ. தூரம் தான் ஆகும்.

## வரலாறு

மற்ற ஸ்தலங்கட்கு உள்ளதைப் போன்று மிக விரிவாக ஸ்தலவரலாறோ வரலாற்று நூலோ, தமிழ் இலக்கியத்தின் ஆதாரங்களோ இத்தலத்திற்கு கிட்டவில்லை.
இத்தலத்தைப் பற்றிய விரிவான ஆராய்ச்சியில் இது காறும் யாரும் ஈடுபடவில்லை. புராண நூல்கள் இத்தலத்தைப் பிரம்மபுரி என்று குறிப்பிடுகின்றன.

பிரம்ம தேவனுக்கும், சிவபெருமானுக்கும் ஐந்து தலைகள் இருந்தன. ஒரு சமயம் நிஷ்டையில் அமர்ந்திருந்த பார்வதி தேவி சற்றே விழித்து நோக்கும் போது அவ்வழியாகச் சென்று கொண்டிருந்த பிரம்மனை தனது பர்த்தாவென்று எண்ணி பாதங்களைக் கழுவி பணிவிடை செய்ய, ஒரு மரியாதையின் பொருட்டு உமையவள் இவ்வாறு செய்கின்றாள் என்று பிரம்மதேவன் அதை ஏற்றுக் கொண்டிருக்கும் போது தற்செயலாக வந்த சிவபெருமான், இதைக் கண்டு சினந்து இருவருக்கும் 5 தலைகள் இருப்பதால் தானே இப்பிரச்சனை உருவாக்கிறதென்று நினைத்து பிரம்மதேவனின் 5 தலைகளில் ஒன்றைச் சிவன் கிள்ளியெறிந்து விட்டார்.

இதனால் பிரம்ம ஹத்தி தோஷம் ஏற்பட்டு, பிரம்மாவின் கபாலம் (மண்டை ஓடு) சிவபெருமானின் கையில் ஒட்டிக் கொண்டது. அத்துடன் பல ஸ்தலங்களை தரிசித்து கொண்டு வந்த சிவன் கரம்பனூர் என்னும் உத்தமர் கோவிலுக்கு வந்த அங்கு மஹா லட்சுமி இட்ட

பிச்சையால் கபாலம் நிறையப் பெற்ற பின் கண்டியூர் செல்லும் வழியில் சிவபெருமான் இத்தலத்தையும் வந்து வழிபட்டு சென்றார். இவ்வரலாறு கந்த புராணத்திலும் கூறப்பட்டுள்ளது.

சிவபெருமான் இத்தலத்திற்கு வந்து சென்ற வரலாறு பல நூல்களில் இல்லாவிட்டாலும் இங்கு கர்ண பரம்பரையாக வழங்கி வரும் செய்தியாகும்.

இத்தலத்தோடு தொடர்பு கொண்ட பலபுராணங்களிலும் பேசப்படும் வரலாறு ஒன்று உண்டு. ஒருரிஷியானவர் தண்ணீருக்குள் மூழ்கி தவஞ் செய்வதில் பெருஞ் சக்தி பெற்று விளங்கினார். இதனால் அவர் மண்டுக மஹரிஷியென்றே அழைக்கப்பட்டார். இவர் ஒரு சமயம் தவத்தில் ஈடுபட்டிருக்கும் போது இவரைக் காண வந்த துர்வாச முனிவர் வெகுநேரம் காத்திருந்தார். ஆனால் மண்டுக மஹரிஷியோ தவத்திலிருந்து மீளவில்லை. இதனால் தன்னை அலட்சியப் படுத்துவதாகக் கருதிய துர்வாசர் சினந்து இம்முனிவரை மண்டூகமாகவே (தவளையாக) போகுமாறு சபித்தார்.

இந்த மண்டுக மஹரிஷி இவ்விடத்தில் தவமிருந்து மஹாவிஷ்ணு பிரத்யட்சமாகி துர்வாச முனிவரின் சாபத்தை நீக்கினார். இதனால் இவ்விடத்திற்கு மண்டுக புரி என்ற பெயரும் உண்டு.

## மூலவர்

வடிவழகிய நம்பி, கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்

## உற்சவர்

சுந்தர ராஜன்

## தாயார்

அழகிய வல்லி நாச்சியார்

## தீர்த்தம்

மண்டுக தீர்த்தம் - கொள்ளிடம்

## விமானம்

தாரக விமானம்

## காட்சி கண்டவர்கள்

சிவன், பிரம்மா, ஊர்வசி

## சிறப்புக்கள்

1. திருமழிசையாழ்வாரால் மட்டும் தலைப்பில் கொடுக்கப்பட்ட ஒரேயொரு பாடலால் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம்.

2. இத்தலம் மிகவும் தொன்மையானதாகும்.


3. சுந்தர சோழன் தன் எதிரிகளோடு போருக்குச் செல்வதற்கு முன், தனது உடைவாளை இப்பெருமானுக்கு முன் வைத்து வணங்கிச் சென்று போரில் வெற்றி வாகை சூடினான் என்றும், அதற்கு நன்றிக் காணிக்கையாக இத்தலத்திற்கு இறையிலி (ஏராளமான நிலதானம்) செய்ததையும் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

4. இக்கோவிலின் பிரகாரத்திலும், சுற்று மதில்களிலும், நடை பாதையிலும் கூட ஏராளமான கல்வெட்டுக்கள் உள்ளன.

5. இவ்விடம் வால்மீகியின் அவதாரஸ்தலம் என்று ஒரு கருத்து நிலவுகிறது. வால்மீகி தமிழ் நாட்டிலிருந்து சென்றவர் என்று கூறும் ஆராய்சியாளருக்கு இங்குள்ள கல்வெட்டுகள் உதவும். இத்தலத்து எம்பெருமான் வால்மீகிக்கும் காட்சி கொடுத்ததாக அறியும் செய்தியும் வால்மீகிக்கும் இத்தலத்திற்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்துகிறது.

6. மிகச் சாதாரண நிலையில், சிற்சில பழுதுபாடுகளுடன் விளங்கினாலும், இத்தலம், தொன்மையினாலும், மேன்மையிலும் மிக உயர்ந்ததுதான்.




Peruvalanallur
Vellanur
227
Mullal
Puvalur
Kattur
Sembarai
Sirumayangudi
West
Thinniyam
Sengaraiyu
Manakkal
algudi
Ariyur
Sathamangalam
Kollidam River
Kollidam - Kallanai Main Rd
Kollidam - Kallanai Main Rd
Kaveri Ri
Kaveri River
Agarapettai
Koohur
Koviladi
22
Elangadu
Kaveri River
Thogur
Katchamangalam
Vennar River
Kiliyur
Indalur
Maraneri
Google
Map data ©2015 Google